**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 67/2015 P.W. 8/L.W.8**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. ரெங்கசாமி** | **Caste** | : | |
| **Father's Name** | : | த/பெ. செல்வகுமார் | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 11.10.2023.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

**1.** நான் மேற்கண்ட முகவரியில் வசித்து ஓட்டுனராக வேலைச் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். சுமார் 8 வருடங்களுக்கு முன்பு மாலை 06.30 மணி அளவில் பேயோடு அம்மன்கோவில் அருகே வைத்து கையெழுத்துச் செய்துக்கொடுத்தேன். யாரிடம் செய்துக்கொடுத்தேன் என்று ஞாபகமில்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசுத்தரப்பு சங்கதிகளிலிருந்து முற்றிலும் மாறுப்பட்ட சங்கதியை இந்நீதிமன்றத்தில் சாட்சியமளித்திருப்பதால் மேற்படி தனது தரப்பு சாட்சியை நீதியின் நலன் கருதி குறுக்குவிசாரணை செய்ய கேட்கிறார் . இந்நீதிமன்றம் வழக்கின் தன்மை கருதி இந்திய சாட்சிய சட்டம் 1872 பிரிவு 154-ன் கீழ் அனுமதிக்கிறது.**

**அரசுத்தரப்பு குறுக்கு விசாரணை**

கடந்த 20.02.2011ம் தேதி காலை 09.00 மணிக்கு வெள்ளிச்சந்தை உதவி ஆய்வாளர் அவர்கள் சம்பவயிடத்தைப் பார்வையிட்டு தயார் செய்த பார்வை மகசரில் நானும் வேல்குமார் என்பவரும் கையொப்பம் செய்தோம் என்று சொல்லிவிட்டு தற்போது குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கு ஆதரவாக வழக்கின் உண்மை நிலையை மறைத்து எனக்கே தெரிந்த காரணத்திற்காக உண்மை சங்கதியை மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்று

சொன்னால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை** :

இல்லை .

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,,
இரணியல்